பட்டுள்ளது. இது தவிர தென்னை மரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க ஒவ்வொரு ஆண்டும் தென்னங்கன்றுகளின் விலையில் 25 சதவீதம் மான்யமாக உழவர்களுக்கு பஞ்சாயத்து ஒன்றியம் மூலமாக வேளாண்மைத் துறை விநியோகம் செய்து வருகிறது. பனை மரத்தைப் பொறுத்த அளவில் இயற்கையாகவும், விவசாயிகள் தாங்களாகவே முன்வந்தும் தங்களுடைய வயல் வரப்புகளிலும் நட்டு அதனுடைய எண்ணிக்கையை அதிகரித்து வருகிறார்கள். இதிலிருந்து தென்னை மற்றும் பனை மரங்களின் எண்ணிக்கை வேளாங்கண்ணி கடற்கரையோரப் பகுதியில் அதிக அளவில் குறையவில்லை என்பது தெரிகிறது.

இணைப்பு X.

[44-ம் பக்கத்திலுள்ள நட்சத்திரக் குறியிடாத வினா எண் 528-க்கான விடையைக் காண்க.]

பின்வரும் திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகிறது :—

(1) தமிழில் சிறந்த நூல்களை வெளிக்கொணர நூலாசிரியர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் வெளிவரும் சிறந்த தமிழ் நூல்களைத் தேர்ந்தெடுத்துப் பரிசளிக்கும் வகையில் சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசளிக்கும் திட்டம்.

(2) தமிழில் சிறந்த நூல்களை வெளியிடுவதற்கு நூலாசிரியர்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டம்.

(3) அரசு ஊழியர்கள் தமிழில் சிறந்த வரைவுகள், குறிப்புகள் எழுதுவதை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழில் சிறந்த வரைவுகள் குறிப்புகள் எழுதும் அரசுப் பணியாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்.

(4) வெளி மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ் வளர்ச்சிக்காக தமிழ் இருக்கையை நிறுவவும், தமிழ் பேராசிரியர் பதவி தோற்றுவிக்கவும், தமிழில் பட்டப்படிப்பு, டிப்ளோமா வகுப்புகள், ஆராய்ச்சிக் கூட்டங்கள் நடத்துவதற்காகவும், தமிழில் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி வெளியிடுவதற்காகவும் நிதியுதவி அளிக்கும் திட்டம்.

(5) பழந்தமிழ் நூல்களை வேற்று மொழியில் மொழியாக்கம் செய்யவும், வேற்றுமொழியில் உள்ள நல்ல நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடுவதற்கான திட்டம்.

(6) அரசு அலுவலகங்களில் உள்ள விதிகள், விதித் தொகுப்புகள் ஆகியவைகளைத் தமிழில் மொழியாக்கம் செய்யும் திட்டம்.

(7) அதிகார பூர்வமான தமிழ்நாட்டு வரலாறு எழுதும் திட்டம்.

(8) தமிழ் நூல் விவர அட்டவணைத் தயாரிப்பு திட்டம்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS